


# டாண்டெம் ப்ரோக்ராம் «come together»
# «ஒன்றுகூடி வாருங்கள்»

**நீங்கள் வசிக்கும் இடத்தில் உள்ளவர்களைப் பற்றி தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா? உங்கள் ஓய்வு நேரத்தில் ஏதேனும் ஒன்றாக இணைந்து செய்ய விரும்புகிறீர்களா? ஸ்விட்சர்லாந்தில் வசிப்பது குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் உள்ளனவா?**

ஜூரிச் ரெட் கிராஸ்-இன் «come together» மூலம், உங்கள் வசிப்பிடத்தைப் பற்றி நீங்கள் நன்றாக தெரிந்துகொள்ளலாம், புதிய நபர்களைச் சந்திக்கலாம், உங்கள் ஜெர்மன் மொழித் திறனை மேம்படுத்தலாம். இந்த சலுகை இலவசமானது.

நீங்கள் ஒரு தன்னார்வலர் அல்லது குடும்பத்தை வாரத்திற்கு ஒருமுறை இரண்டு மணிநேரங்கள் சந்திப்பீர்கள். இந்த சந்திப்புகள் விண்டர்தூர் (Winterthur) மற்றும் ஆண்டேல்பிங்கென் (Andelfingen) பகுதிகளில் நடைபெறும்.

தன்னார்வலர்கள் என்பவர்கள் தங்களது விருப்பத்தின் பெயரில் மற்றும் மகிழ்ச்சி யோடுஒரு வேலையில் ஈடுபடுபவர்கள். «come together»-இன் தன்னார்வலர்கள் அந்த பகுதியில் நீண்ட நாட்களாக வசித்து வரும் பெண்கள், ஆண்கள் மற்றும் குடும்பத்தினர்கள் ஆவார்கள்.

**நீங்கள்...**

... ஒரு தனிநபராகவோ, தம்பதியராகவோ அல்லது குடும்பமாகவோ இருக்கலாம்
... F அல்லது B பர்மிட்டை கொண்டிருக்கவேண்டும் (புலம்பெயர்ந்தவர்கள்)
... குறைந்தது 18 வயது நிரம்பியிருக்கவேண்டும்
... ஜெர்மன் மொழி பேச தெரிந்திருக்கவேண்டும் (குறைந்தது A1 நிலை)
... விண்டர்தூர் (Winterthur) அல்லது ஆண்டேல்பிங்கென் (Andelfingen) மாவட்டங்களில் வாசிப்பவராக இருக்கவேண்டும்
... பணி அல்லது பயிற்சியை தேடுபவராக இருக்ககூடாது (ஏனெனில் நீங்கள் சிறு குழந்தைகளை பராமரிப்பவர்,அல்லது நீங்கள் ஒரு வயதான நபர் அல்லது உடல்நல பிரச்சனைகள் கொண்டவராக இருத்தல்)

**அல்லது நீங்கள்**

... விண்டர்தூர் (Winterthur) அல்லது ஆண்டேல்பிங்கென் (Andelfingen) என்ற பிரதேசத்திற்கு புதியவராக இருக்கலாம் மற்றும் ஜெர்மன் மொழி A2 நிலையை அடையவில்லை.

**பதிவு மற்றும் தகவல்களுக்கு**
www.srk-zuerich.ch/come-together-info
come-together@srk-zuerich.ch
தொலைபேசி 044 288 25 69
வாட்ஸ்அப் 079 485 94 78 (உரசையெதி மட்டும)



Schweizerisches Rotes Kreuz
Kanton Zürich

KIP
KANTONALES INTEGRATIONSPROGRAMM
KANTON ZÜRICH

டாண்டெம்ப்ரோக்ராம் (Tandemprogramm) ஜூரிச் காண்டனின் குறிப்பிட்ட ஒருங்கிணைப்பு நிதியின் ஒரு பகுதியாகும் மற்றும் புலம்பெயர்ந்தவர்களுக்கான புதிய ஆதரவு திட்டத்தின் (IAZH) ஒரு பகுதியாக செயல்படுத்தப்படுகிறது